Single-point levy of taxation on motor vehicles

* 395 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government of India have recently asked the Government the desirability of accepting the principle of single-point levy of taxation on motor vehicles; and

(*b*) if so, the nature of reply sent by Government?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir; the Government of India have addressed all State Governments in the matter.

(*b*) The matter is under examination.

SRI A. A. RASHEED : Will the Government accept the principle of single levy taxation on vehicles?

THE HON. SRI V. RAMAIAH : It is under examination.

Civil cases and criminal cases

* 396 *Q.*—SRI **P. G. MANICKAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

1959-60-ல் எத்தனை (1) கிரிமினல் கேஸ்களிலும், (2) சிவில் கேஸ்களிலும் ஹரிஜனங்களுக்கு வக்கீல்கள் அமர்த்த சர்க்கார் உதவி செய்தது?

THE HON. SRI P. KAKKAN : No legal aid was sanctioned during the year 1959-60.

SRI P. G. MANICKAM : லீகல் எய்ட் தேவையென்று ஹரிஜனங்கள் கலெக்டர்களுக்கு விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். அப்படி எத்தனை விண்ணப்பங்கள் ஹரிஜனங்களிடமிருந்து கிடைத்தன? அவற்றில் எத்தனை பேர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது?

THE HON SRI P. KAKKAN : கலெக்டர்களிடத்தில் ஹரிஜனங்கள் முறையிட்டு, க்ரிமினல் கேசுகளில் வக்கீல்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தால், கொடுத்திருப்பார்கள். கேள்வியில் அங்கத்தினர் 1959-60-ல் இம்மாதிரி வந்திருக்கிறதா என்று கேட்டிருந்தார்கள்? அதற்கு எந்த விதமான அறிக்கையும் கலெக்டரிடமிருந்து வரவில்லை என்று சொன்னேன்.

Area committees

* 397 *Q.*—SRI **P. G. MANICKAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) "*1959-60-ல்* Hindu Religious Endowment Board's Area Committee" கள் எத்தனை இருக்கின்றன?